## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 94** **நாள்: 12.02.2026**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 15.88 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால், பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் உள்ளிட்ட பணிகளை இன்று அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், இன்று (12.02.2026) திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 15.88 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால், பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் உள்ளிட்ட பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர் பிரதான சாலையில் மூலதன நிதியின் கீழ், ரூபாய் 11.75 கோடி மதிப்பீட்டில் வார்டு-70ல் இராகவன் தெரு முதல் பெரம்பூர் நெடுஞ்சாலை வரை 756 மீட்டர் தூரத்திற்கும், வார்டு-71ல் பெரம்பூர் பிரதான சாலை முதல் பாரதி சாலை சந்திப்பு மற்றும் பிபி சாலை வரை 1,012 மீட்டர் தூரத்திற்கும் மற்றும் வார்டு-74ல் சுரங்கப்பாதை சந்திப்பு முதல் ஏகாங்கிவுரம் கானல் சந்திப்பு வரை 350 மீட்டர் தூரத்திற்கும் என மொத்தம் 2,118 மீட்டர் தூரத்திற்கு புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-71க்குட்பட்ட பெரம்பூர், வடிவேலு 2வது குறுக்குத் தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடத்திற்கான பணி மற்றும் வார்டு-75க்குட்பட்ட ஏ.கே. சாமி நகர், 9ஆவது தெருவில் மூலதன நிதியின் கீழ், ரூபாய் 3.63 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுமானப் பணி ஆகியவற்றை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி புனிதவதி எத்திராசன், திருமதி சி.ஸ்ரீதணி, திருமதி எல்.ரமணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**